ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# ॥ கண்சோர ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கண்சோர ॥

## திருச்சேறை

‡கண் சோர வெங்குருதி வந்திழிய⋆
வெந்தழல் போல் கூந்தலாளை⋆
மண் சேர முலையுண்ட மா மதலாய்!⋆
வானவர் தம் கோவே! என்று⋆
விண் சேரும் இளந் திங்கள் அகடுரிஞ்சு⋆
மணி மாட மல்கு⋆ செல்வத்-
தண் சேறை எம்பெருமான் தாள் தொழுவார்⋆
காண்மின் என் தலை மேலாரே (1)

அம்புருவ வரி நெடுங்கண்⋆ அலர் மகளை
வரையகலத்தமர்ந்து மல்லல்⋆
கொம்புருவ விளங்கனிமேல்⋆ இளங்கன்று
கொண்டெறிந்த கூத்தர் போலாம்⋆
வம்பலரும் தண் சோலை⋆ வண் சேறை
வான் உந்து கோயில் மேய⋆
எம்பெருமான் தாள் தொழுவார்⋆ எப்பொழுதும்
என் மனத்தே இருக்கின்றாரே (2)

மீதோடி வாள் எயிறு மின்னிலக⋆
முன் விலகும் உருவினாளை⋆
காதோடு கொடி மூக்கன்றுடன் அறுத்த⋆
கைத்தலத்தா! என்று நின்று⋆
தாதோடு வண்டலம்பும்⋆ தண் சேறை
எம்பெருமான் தாளையேத்தி⋆
போதோடு புனல் தூவும் புண்ணியரே⋆
விண்ணவரில் பொலிகின்றாரே (3)

தேர் ஆளும் வாள் அரக்கன்⋆ தென்னிலங்கை
    வெஞ்சமத்துப் பொன்றி வீழ⋆
போர் ஆளும் சிலையதனால்⋆ பொரு கணைகள்
    போக்குவித்தாய்! என்று⋆ நாளும்
தார் ஆளும் வரை மார்பன்⋆ தண் சேறை
    எம்பெருமான் உம்பர் ஆளும்⋆
பேராளன் பேர் ஓதும் பெரியோரை⋆
    ஒருகாலும் பிரிகிலேனே (4)

வந்திக்கும் மற்றவர்க்கும்⋆ மாசுடம்பின்
    வல்லமணர் தமக்கும் அல்லேன்⋆
முந்திச் சென்றரியுருவாய்⋆ இரணியனை
    முரண் அழித்த முதல்வர்க்கல்லால்⋆
சந்தப் பூ மலர்ச் சோலை⋆ தண் சேறை
    எம்பெருமான் தாளை⋆ நாளும்
சிந்திப்பார்க்கென் உள்ளம்⋆ தேன் ஊறி
    எப்பொழுதும் தித்திக்குமே (5)

பண்டேனமாய் உலகை அன்றிடந்த⋆
    பண்பாளா! என்று நின்று⋆
தொண்டானேன் திருவடியே துணையல்லால்⋆
    துணையிலேன் சொல்லுகின்றேன்⋆
வண்டேந்தும் மலர்ப் புறவில்⋆ வண் சேறை
    எம்பெருமான் அடியார் தம்மை⋆
கண்டேனுக்கிது காணீர்⋆ என் நெஞ்சும்
    கண்ணிணையும் களிக்கும் ஆறே (6)

பை விரியும் வரியரவில்⋆ படு கடலுள்
    துயில் அமர்ந்த பண்பா! என்றும்⋆
மை விரியும் மணி வரைபோல்⋆ மாயவனே!
    என்றென்றும் வண்டார் நீலம்⋆
செய் விரியும் தண் சேறை எம்பெருமான்⋆
    திருவடியை சிந்தித்தேற்கு⋆ என்

ஐயறிவும் கொண்டானுக்காள் ஆனார்க்
காளாம்⋆ என் அன்பு தானே (7)

உண்ணாது வெங்கூற்றம்⋆ ஓவாது
பாவங்கள் சேரா⋆ மேலை
விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும்⋆
மென் தளிர்போல் அடியினானை⋆
பண்ணார வண்டியம்பும்⋆ பைம் பொழில் சூழ்
தண் சேறை அம்மான் தன்னை⋆
கண்ணாரக் கண்டுருகி⋆ கையாரத்
தொழுவாரைக் கருதுங்காலே (8)

கள்ளத்தேன் பொய்யகத்தேன் ஆதலால்⋆
போதொருகால் கவலை என்னும்⋆
வெள்ளத்தேற்கென்கொலோ⋆ விளை வயலுள்
கரு நீலம் களைஞர் தாளால்
தள்ள⋆ தேன் மண நாறும்⋆ தண் சேறை
எம்பெருமான் தாளை⋆ நாளும்
உள்ளத்தே வைப்பாருக்கிது காணீர்⋆
என்னுள்ளம் உருகும் ஆறே (9)

‡பூ மாண் சேர் கருங்குழலார்போல் நடந்து⋆
வயல் நின்ற பெடையோடு⋆ அன்னம்
தேமாவின் இன்னிழலில் கண் துயிலும்⋆
தண் சேறை அம்மான் தன்னை⋆
வா மான் தேர்ப் பரகாலன்⋆ கலிகன்றி
ஒலிமாலை கொண்டு தொண்டீர்⋆
தூ மான் சேர் பொன்னடிமேல் சூட்டுமின்⋆ நும்
துணைக் கையால் தொழுது நின்றே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥